சம்பா சாகுபடி: கூடுதல் தண்ணீருக்கு காத்திருக்கும் டெல்டா விவசாயிகள்

First Published : 13 Aug 2010 12:00:00 AM IST



வீராணம் ஏரியின் தோற்றம் (கோப்பு படம்).

கடலூர், ஆக.12: கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிப் பணிகளை முன்னரே தொடங்க வசதியாக, கொள்ளிடம் கீழணைக்கு கூடுதலாக காவிரி நீரைத் திறக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

÷காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு மேட்டூர் அணையில் இருந்து கடந்த ஜூலை 28-ம் தேதி, 6 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. உடனேயே அது 4 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது.

÷இவ்வாறு திறக்கப்பட்ட நீரால் காவிரிக் கரையோர மாவட்டங்களில் ஆடிப்பெருக்கை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கே பயன்பட்டது.

÷கல்லணைக்கு வரும் 4 ஆயிரம் கனஅடி நீரில், கடலூர், நாகை மாவட்டங்களின் சம்பா சாகுபடிக்கு, 10 சதவீதம் தண்ணீர் திறக்க வேண்டும் என்ற அடிப்படையில், 400 கன அடி மட்டுமே கொள்ளிடம் கீழணைக்குத் திறக்கப்பட்டது. இதனால் 9 அடி உயரம் கொண்ட கொள்ளிடம் கீழணையில், 5.6 அடி உயரத்துக்கே நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

÷இந்த நிலையில் கொள்ளிடம் கீழணையில் இருந்து புதன்கிழமை பாசனத்துக்கு 550 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. வடவாறு, வடக்குராஜன் வாய்க்கால், தெற்குராஜன் வாய்க்கால், குமிக்கு மண்ணியாறு உள்ளிட்ட பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால் திறந்த சில மணி நேரத்திலேயே, வடவாறு தவிர ஏனைய வாய்க்கால்களில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. வடவாறில் தற்போது 550 கனஅடி நீர் முழுவதும் திறக்கப்பட்டு உள்ளது.

÷ஆனால் வியாழக்கிழமை பகல் 12 மணி வரை அந்த நீர் வீராணத்தைச் சென்றடையவில்லை.

மேட்டூர் அணையில் காவிரிநீர் இருப்பு குறைவாக இருப்பினும், கடலூர் மாவட்டம் தவிர, ஏனைய டெல்டா மாவட்டங்களில் வாய்க்கால் தூர்வாரும் பணிகள் இன்னமும் முடிவடையாமல் இருப்பதே, மேட்டூர் அணையில் இருந்து, பாசனத்துக்கு குறைவான நீர், திறப்பதற்குக் காரணம் என்று, பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

÷வீராணம் ஏரியில் வியாழக்கிழமை நீர் மட்டம் 41.1 அடியாக இருந்தது. வீராணத்தில் நீர் மட்டம் 42 அடியாக உயர்ந்தால் மட்டுமே, சென்னைக்கு முழு அளவான 77 கனஅடி நீர் அனுப்ப முடியும். தற்போது நீர் மட்டம் குறைவாக இருப்பதால், 3 மோட்டார்கள் மட்டும் இயக்கப்பட்டு 55 கனஅடி நீர் மட்டுமே அனுப்பப்படுகிறது.

÷வடவாறில் 1,000 கனஅடியாவது திறந்தால்தான், வீராணத்தின் நீர் மட்டத்தை ஒரு வாரத்தில் 42 அடிக்கு உயர்த்த முடியும், அதன்பிறகே சென்னைக்கு 77 கனஅடி நீர் அனுப்ப முடியும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

÷இதுகுறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், கடந்தஆண்டு காலம் கடந்து காவிரி நீர் திறக்கப்பட்டதால், கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளில் 1 லட்சம் ஏக்கரில் உளுந்து பயிரிட முடியாமல் போயிற்று. இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 80 கோடிக்கு மேல். தமிழகத்தில் உளுந்து விலையும் அதிகரித்தது.

÷அதனால்தான் சம்பா விவசாயத்தை முன்னரே தொடங்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிவருகிறோம்.

கடலூர் மாவட்டத்தை பொருத்தவரை பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் முடிவடைந்துவிட்டதால் சம்பா சாகுபடியை முன்னரே தொடங்க விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள்.

÷கடலூர் மாவட்டத்தில் விவசாயப் பணிகளைத் தொடங்கவும், வீராணம் நீர் மட்டத்தை உயர்த்தவும் வசதியாக, கொள்ளிடம் கீழணைக்கு கல்லணையில் இருந்து உடனே கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும் என்றார்.

÷இதுகுறித்து கொள்ளிடம் கீழணை பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் செல்வராஜ் கூறுகையில், கீழணையில் இருந்து திறக்கப்படும் 550 கனஅடி நீர் முழுவதும், வடவாறில் விடப்பட்டு உள்ளது.

÷எனினும் இந்த அளவு நீரைக் கொண்டு வீராணம் ஏரி 42 அடியை எட்ட காலதாமதம் ஆகும். கல்லணையில் கூடுதல் நீர் திறந்தால், பாசனத்துக்கும், சென்னைக் குடிநீருக்கும் கூடுதல் நீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது
என்றார்.

**வாழைப் பாதுகாப்பில் புதிய தொழில்நுட்பம்**

First Published : 12 Aug 2010 02:45:14 AM IST



கிழக்கு ராமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ஞானசேகரனின் தோட்டத்தில் நைலான் கயிறுகளால் கட்டப்பட்ட வாழைமரங்கள்.

கடலூர், ஆக. 11: வாழைப் பாதுகாப்பில் புதிய தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர்.

÷தமிழ்நாட்டில் 83 ஆயிரம் ஹெக்டேரில் வாழை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. திருச்சி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல் மாவட்டங்களில் வாழை அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

÷கடலூர் மாவட்டத்தில் முட்லூர், வல்லம்படுகை, கடலூரை அடுத்த கேப்பர் மலை கிராமங்களில் 4 ஆயிரம் ஹெக்டேரில் வாழை பயிரிடப்பட்டு உள்ளது.

÷வாழை சாகுபடியில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு | 50 ஆயிரத்துக்கு மேல் லாபம் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. வாழைப் பயிரில் நோய்த் தாக்குதல் பெருமளவுக்கு ஏற்படுவதில்லை. எனினும், சூறாவளிக் காற்று பல நேரங்களில் விவசாயிகளுக்கு மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது.

÷சவுக்கு, யூகலிப்டஸ் உள்ளிட்ட மரக்கழிகளை வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுத்து, காற்றில் விழுந்து விடாதவாறு பாதுகாக்கும் முறை, காலம் காலமாக விவசாயிகளால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதற்கான கழிகள் வாங்க ஏக்கருக்கு | 20 ஆயிரம் செலவாகிறது. கயிறு உள்ளிட்ட பொருள்கள் மற்றும் கட்டுக்கூலி ஆகியவற்றுடன் சேர்த்துப் பார்க்கும்போது, ஏக்கருக்கு | 25 ஆயிரம் செலவாகிறது. இதற்காக வங்கிகள் ஏக்கருக்கு | 25 ஆயிரம் வரை கடன் வழங்குகின்றன. வாழை மரங்களை நைலான் கயிறுகளால் இணைத்துக் கட்டிவிடும் புதிய தொழில்நுட்பம், நல்ல பலனைத் தருவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். ஒவ்வொரு வாழை மரத்தைச் சுற்றியும், ஒரு நைலான் கயிற்றை தொய்வாகக் கட்டிவிட்டு, அதில் இருந்து 4 புறமும் வாழைகளை நீண்ட நைலான் கயிறுகளால் இணைத்து, இறுதியாக மின்கம்பங்களுக்கு ஸ்டேவயர் கட்டுவதுபோல் நிலத்தில் இழுத்துக் கட்டிவிடும் புதிய முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

÷கழிகளை முட்டுக் கொடுக்கும் பாதுகாப்பு முறையைவிட, இவ்வாறு நைலான் கயிறுகளால் வாழைகளை பிணைத்துக் கட்டுவதால், சூறாவளிக் காற்றில் இருந்து 100 சதவீதம் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷கழிகளுக்கு ஆகும் செலவைவிட நைலான் கயிறுகளுக்கு செலவு குறைவாகவும், ஒருமுறை பயன்படுத்திய நைலான் கயிறுகளை, 8 ஆண்டுகள் வரை கூட தொடர்ந்து பயன்படுத்த முடியும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

÷இந்த புதிய தொழில்நுட்பத்துக்கு ஏக்கருக்கு | 13 ஆயிரம்தான் செல்வாகிறது என்றும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷கடலூர் அருகே கிழக்கு ராமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரும் முன்னோடி விவசாயியுமான ஞானசேகரன், தனது வாழைத் தோட்டங்களில் 3 ஏக்கரில் மட்டும் நைலான் கயிறுகளால் பிணைத்துக் கட்டும் புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றி இருக்கிறார்.

÷இதனால் இரு தினங்களுக்கு முன் இப்பகுதியில் அடித்த சூறைக்காற்றில், 250 ஏக்கரில் வாழை மரங்கள் முறிந்து சேதம் அடைந்த போதிலும், தனது வாழை மரங்கள் முழுமையாகத் தப்பியதாக ஞானசேகரன் தெரிவித்தார்.

÷கடலூர் மாவட்டத்தில் முதல்முதலாக இந்தத் தொழில்நுட்பத்தை 3 ஏக்கரில் மட்டும் பயன்படுத்தியவர் ஞானசேகரன். பிற மாவட்டங்களில் தலா 30 அல்லது 40 ஏக்கரில் மட்டும் பிரபலமாகி இருக்கும் இந்த புதிய பாதுகாப்பு முறையை, மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

÷மேலும் வாழைமரங்களின் பழங்கள், நார் ஆகியவற்றைக் கொண்டு, புதிய பொருள்களை உருவாக்கி விவசாயிகள் தங்கள் வருவாயை உயர்த்த முடியும் என்றும் அவர் கூறினார்.

**கால்நடை பாதுகாப்பு முகாம்**

First Published : 12 Aug 2010 01:03:22 PM IST

தஞ்சாவூர், ஆக. 11: திருவோணம் அருகேயுள்ள காயாவூர் ஊராட்சியில் தமிழக அரசின் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் அண்மையில் நடைபெற்றது.

இந்த முகாமில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி, இலவச செயற்கை முறை கருவூட்டல் சிகிச்சை, குடல்புழு நீக்கம், கோழிகளுக்கு தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

அதம்பை கால்நடை மருத்துவர் எஸ். சுவாமிநாதன் உள்ளிட்ட கால்நடை ஆய்வாளர்கள், உதவியாளர்கள் முகாமுக்கு அழைத்துவரப்பட்டிருந்த 482 கால்நடைகள், கோழிகளை பரிசோதனை செய்து, சிகிச்சையளித்தனர்.

சிறந்த முறையில் கால்நடைகளை பராமரித்து வருவோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், கால்நடைகளை நோய்த் தாக்காமல் பாராமரிப்பது தொடர்பாக முகாமில் விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஆர். பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

**சின்னமனூரில் வாழை பதனிடும் நிலையம் அமைக்கும் பணிகள் தொடக்கம்**

First Published : 12 Aug 2010 11:24:38 AM IST

தேனி, ஆக. 11: தேனி மாவட்டம் சின்னமனூரில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் ரூ.50 லட்சம் மதிப்பில் வாழை பதனிடும் நிலையம் அமைக்கும் பணிகளை வேளாண்மை விற்பனைக் குழு மாநிலத் தலைவர் அக்ரி கணேசன் தொடக்கி வைத்தார் (படம்).

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து ஆட்சியர் பூ.முத்துவீரன் பேசியது: மாவட்டத்தில் சின்னமனூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் வாழை சாகுபடி நடைபெறுகிறது. இங்கு விளைவிக்கப்படும் வாழைக்காய் அதிக அளவில் பெங்களூரு சேப்பல் மார்க்கெட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது விவசாயிகள் நலன் கருதி தமிழகத்தில் முதன் முதலாக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள வாழை பதனிடும் நிலையம் அமைக்க அரசு ரூ.50 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்றார்.

இந்த நிகழ்ச்சியில் தேசிய ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் ராம்டெக், வேளாண்மை விற்பனைக் குழு மாவட்டத் தலைவர் சண்முகவேல், சின்னமனூர் நகராட்சித் தலைவர் தமிழ்ச்செல்வி கூத்தபெருமாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் இணையதளம்: விவரங்களை பதிவு செய்ய அழைப்பு**

First Published : 12 Aug 2010 01:32:12 PM IST

ஆறுமுகனேரி, ஆக.11: வேளாண் இணையதளத்தில்(அக்ரிஸ்நெட்) தங்கள் விவரங்களை விவசாயிகள் பதிவு செய்து பயன்பெற வேண்டுமென உடன்குடி உதவி வேளாண் இயக்குநர் த.பாரதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் இணையதள (அக்ரிஸ்நெட்) சேவையை தமிழக அரசின் வேளாண் துறை உருவாக்கி உள்ளது.

இதில், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் தகவல்களை பெற முடியும்.

இத் திட்டத்தின் கீழ் கிராமம் வாரியாக விவசாயிகள் பற்றிய தகவல்கள் வேளாண் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு குறியீடு எண் கொடுக்கப்படுகிறது.

அந்தக் குறிஎண்ணை பயன்படுத்தி விவசாயிகள் வேளாண் இணையதளத்தின் சேவை மற்றும் விவரங்கள் அனைத்தையும் பெற இயலும்.

விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி, பிறந்த தேதி, கல்வித் தகுதி, நிலம் உள்ள கிராமம், சர்வே எண், வயலின் பரப்பு, சாகுபடி செய்யும் பயிர், வங்கிக் கணக்கு மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை உடன்குடி வேளாண் விரிவாக்க மையத்தில் கொடுக்க வேண்டும். சேகரிக்கப்படும் இவ் விவரங்கள் வேளாண் இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

எனவே, உடன்குடி வட்டார விவசாயிகள் தங்களைப் பற்றிய விவரங்களை உடன்குடி வேளாண் விரிவாக்க மையத்தில் நேரில் வந்து பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுதொடர்பாக (04639)-250301 என்ற தொலைபேசியிலும், 94427 23083, 9994274140, 9942322977, 9976748750 மற்றும் 9443469201 என்ற செல்போன் எண்களிலும் தொடர்பு கொண்டு விவரம் கேட்டறிவதோடு தங்கள் பற்றிய விவரங்களையும் பதிவு செய்து கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

**காய்கறி விளைச்சலுக்கு ஏற்ற காலநிலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 12 Aug 2010 10:44:14 AM IST

குன்னூர், ஆக. 11: குன்னூரில் தற்போது நிலவும் காலநிலை காரணமாக மலைக் காய்கறிகளின் விளைச்சலில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

÷நீலகிரி மாவட்டம் குன்னூரில் கடந்த சில மாதங்களாக பெய்து வந்த மழையின் காரணமாக காய்கறிகளின் விளைச்சலில் மந்த நிலைக் காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக குன்னூரில் நிலவி வரும் பருவ நிலை மாற்றத்தின் காரணமாக இப்பகுதியில் விளையும் மலைக் காய்கறிகளான கேரட், பீட்ரூட், முட்டைகோஸ், உருளை கிழங்கு உள்ளிட்டக் காய்கறி வகைகளை சாகுபடி செயவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக தேயிலை விவசாயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து கணிசமான அளவு விவசாயிகள் காய்கறி பயிரிடத் துவங்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனனர்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சிறப்புப் பயிற்சி**

First Published : 12 Aug 2010 10:43:54 AM IST

உதகை, ஆக. 11: நீலகிரி மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் தயாளன் தெரிவித்துள்ளதாவது: நீலகிரி மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்டு மாதத்திற்கான உத்தேச கல்வித் திட்டத்தின்படி 7ம் தேதி நெலாக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இம்மாதம் 14ம் தேதி எடப்பள்ளியிலும், 17ம் தேதி தாவணியிலும், 19ம் தேதி கல்லட்டியிலும், 24ம் தேதி கிண்ணக்கொரையிலும், 26ம் தேதி டி.மணியட்டி கிராமத்திலும், 28ம் தேதி நெடுகுளா கிராமத்திலும், 31ம் தேதி மேல்கவ்வட்டி கிராமத்திலும் ஆங்காங்குள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் சிறப்பு உறுப்பினர் கல்வித்திட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் மண்டல இணைப்பதிவாளர் தயாளன், மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ஜெயக்குமார், துணைப் பதிவாளர் (பயிற்சி) ஏ.ஜீவா மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி அதிகாரிகள் பங்கேற்று பயிற்சியளிப்பர். இப்பயிற்சி முகாம்களில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று பயனடையுமாறு மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் தயாளன் தெரிவித்துள்ளார்.

மேலும், கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அனைவரும் தங்களது கூட்டுறவு சங்கங்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். நெலாக்கோட்டை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் தற்போது விவசாயக் கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன், கூட்டுப் பொறுப்பு குழுக்கடன் மற்றும் நகைக்கடன் உள்ளிட்ட இதர கடன்களையும் வழங்கி வருகிறது. தற்போது விவசாயக் கடன்களுக்கு ஓராண்டுக்குள் வாங்கிய கடனை திருப்பி செலுத்துபவர்களுக்கு வட்டி வசூலிக்கப்பட மாட்டாது. அதேபோல, விவசாய காரியங்களுக்கு பெறப்படும் நகைக் கடன்களை ஓராண்டுக்குள் திருப்பி செலுத்தினாலும் வட்டி வசூலிக்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**மேட்டூர் அணை நீர்வரத்து சரிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:26 IST

மேட்டூர்: கபினி அணை உபரி நீர்திறப்பு குறைக்கப்பட்டதால், மேட்டூர் அணை நீர்வரத்து சரியும் நிலை ஏற்பட்டுள்ளது.கர்நாடகாவில் உள்ள கபினி அணையிலிருந்து உபரி நீர் கூடுதலாக திறக்கப்பட்டதால், கடந்த 28ம் தேதி 82 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரித்தது.கடந்த வாரம் கபினியில் இருந்து விநாடிக்கு 24 ஆயிரம் கனஅடிநீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. அதன்பின்பு நீர்பிடிப்பு பகுதியில் பருவமழையின் தீவிரம் குறைந்ததால் கபினி அணை நீர்வரத்து நேற்று விநாடிக்கு 4,134 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து விநாடிக்கு 4, 420 கனஅடி நீர்மட்டுமே மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. கபினி உபரி நீர்திறப்பு குறைந்ததால் வரும் நாளில் மேட்டூர் அணை நீர்வரத்து சரியும். அதனால், அணையின் நீர்மட்டம் குறைய துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அரிசி விலை உயராது வியாபாரிகள் கருத்து**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:20 IST

ஈரோடு: "ஈரோட்டில் இனி வரும் வாரங்களில் அரிசி விலை அதிகரிக்க வாய்ப்பில்லை' என, ஈரோடு அரிசி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.அக்ரஹாரம் அரிசி சந்தை வியாபாரி ஒருவர் கூறியதாவது:அரிசி வியாபாரம் மந்தமாக உள்ளது. இனி வரும் வாரங்களில் அரிசி விலை அதிகரிக்க வாய்ப்பில்லை. ஈரோடு சுற்றுவட்டார வியாபாரிகள் விற்பனைக்காக 3,000 அரிசி மூட்டைகள் கொண்டு வந்திருந்தனர்.

2,000 அரிசி மூட்டைகளே விற்றன.நேற்றைய நிலவரப்படி அரிசி விலை (75 கிலோ)வருமாறு:அதிசயப் பொன்னி (பழையது) 1,800 முதல் 1,900 ரூபாய், அதிசயப் பொன்னி(புதியது)1,500 முதல் 1,550 ரூபாய், கர்நாடகா டீலக்ஸ் 2,300 முதல் 2,350 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (புதியது) 1,950 முதல் 2,000 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (பழையது) 1,350 முதல் 1,400 ரூபாய், இட்லி அரிசி (புதியது) 1,500 முதல் 1,600 ரூபாய், ஏ.டி.டி., 36 (புதியது) 1,450 முதல் 1,500 ரூபாய், ஏ.டி.டி., 36 (பழையது) 1,700 முதல் 1,750 ரூபாய்

வரையும், எமெர்ஜென்சி பொன்னி (புதியது) 1,650 முதல் 1,750 ரூபாய் வரையும், எமெர்ஜென்சி பொன்னி (பழையது) 1,900 ரூபாய் வரை விலைபோனது.இவ்வாறு அவர் கூறினார்.

**பயிர் காப்பீடு செய்ய; விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:13 IST

நாமக்கல்: "தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ், பயிர் காப்பீடு செய்து விவசாயிகள் பயன்பெற வேண்டும்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்பட்டு பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு மற்றும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. நெல் மற்றும் நிலக்கடலை பயிருக்கு தற்போது நாமக்கல் வட்டாரம், நல்லிபாளையம் பிர்கா தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் விவசாய துறையினரால் பயிர் அறுவடை காலத்தில் பரிசோதனை நடத்தப்பட்டு, நடப்பு பருவத்தில் சராசரி மகசூலை கடந்த மூன்று அல்லது ஐந்து ஆண்டு கால உத்திரவாத மகசூலோடு ஒப்பிடப்படுகிறது. இப்பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அந்த விகிதப்படி இவ்வாட்டாரத்தில் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும்.விவசாயிகள் கடன் வாங்கும் வங்கியிலேயே கட்டாயமாக பயிர்காப்பீடு செய்யப்படும். பயிர்கடன் வாங்காத விவசாயிகள் வங்கிகளில் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். எனவே நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள், அவற்றை ஒரு மாத காலத்துக்குள் அல்லது அவற்றில் எது முன்போ அதற்குள் வங்கியில் பிரிமியம் செலுத்தி செப்டம்பர் 15ம் தேதிக்குள் காப்பீடு செய்ய வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதிய நீர்பாசன முறைகளை; செயல்படுத்த மானிய விலையில் பி.வி.சி., பைப்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:11 IST

ராசிபுரம்: "விவசாயிகளுக்கு பி.வி.சி., பைப்புகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது' என, எலச்சிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாளுக்குள் நாள் குறைந்து வரும் நீரின்

அளவை கருத்தில் கொண்டு, அரசு புதிய நீர் பாசன முறைகளுக்கும், பாசனத்திற்கு உபயோகிக்கும் பைப்புகளுக்கும் மானியம் வழங்க முன் வந்துள்ளது. அதன் படி எலச்சிபாளையம் வட்டாரத்தில் ஐசோபாம் எண்ணெய்வித்துகள் திட்டத்தின் கீழ், இரண்டு, இரண்டரை, மற்றும் மூன்று இஞ்ச் பி.வி.சி., பைப்புகள் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.தேவைப்படும் விவசாயிகள் அவர்கள் விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பைப்புகளை பெற்று கொள்ளலாம். ஒரு விவசாயி அதிகபட்மாக 800 மீட்டர் அளவு வரை பைப்புகளை பெற்றுக் கொள்ளலாம்.அந்த பைப்பின் விலையில் 50 சதவீதம் மானியம் அல்லத அதிகபட்சமாக 15 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் தாங்கள் விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பைப்லைன் கருவிக்காக "கொட்டேசன்' பெற்று, மானியம் போக மீதம் உள்ள தொகைக்கு வங்கி டிடி எடுத்து, சிட்டா அடங்கல் போன்ற ஆவணங்களை  இணைத்து வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் வழங்க வேண்டும்.அவ்வாறு வங்கி வரைவோலையுடன் (டிடி.,) விண்ணப்பம் செய்பவர்களுக்கு விரைவில் பைப்லைன் கருவிகள் சப்ளை செய்ய உத்தரவுகள் வழங்கப்படும்.

**நோய் தாக்காத இடத்தில் கரும்பு விதைக் கரணை தேர்வு: வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:04 IST

நாமக்கல்: ""கரும்பு சாகுபடிக்கு விதை கரணைகளை நோய் தாக்காத இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்," என, வேளாண் உதவி இயக்குர் சுப்ரமணியம் தெரிவித்தார். கபிலர்மலை யூனியன் ஆனங்கூர் பஞ்சாயத்தில் கிராம அடிப்படை பயிற்சி முகாம் நடந்தது.அதில், வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தலைமை வகித்து துவக்கி வைத்து பேசியதாவது:கரும்பு பயிரில் சரியான ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். விதைக் கரணைகளை நோய் தாக்காத இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து, அந்த கலவையில் 100 கிராம் கார்பன்டாசிம் மருந் கலந்து அதில், 15 நிமிடம் கரணைகளை நனைத்து நடவு செய்ய வேணடும். பாருக்கு பார் 80 செ.மீ., இடைவெளியில் பருக்கள் பக்கவாட்டில் இருக்குமாறு தொடர் நடவு செய்ய வேண்டும்.ஐந்து பொட்டலும் அசோஸ்பைரில்லம், ஐந்து பொட்டலம் பாஸ்போ பாக்டீரியாவை 10 கிலோ தொழு உரத்துடன் கலந்து தூர்களுக்கு பக்கத்தில், நடவு செய்த 30வது, 60வது நாள் இடவேண்டும். மண் பரிசோதனையின்படி உரமிட வேண்டும்.

பொதுப்பரிந்துரைப்படி ஐந்து டன் தொழு உரம் மற்றும் 156 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை நடவுக்கு முன் பார்களில் இட வேண்டும். நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை தவிர்க்க துத்தநாக சல்பேட் 15 கிலோ, இரும்பு சல்பேட் 40 கிலோ கரும்பு நுண்ணூட்டக் கலவை ஐந்து கிலோ இட

வேண்டும்.நடவு செய்த 3ம் நாள் ஏக்கருக்கு 800 கிராம் அட்ராட் ஒரு லிட்டர் மருந்தை 250 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இரும்பு மறறும் துத்தநாக சத்து பற்றாக்குறை நீக்க கரும்புநடவு செய்த 90வது, 120வது மற்றும் 150வது நாட்களில் .5 சதவீதம் துத்தநாக சல்பேட் மற்றும் .5 சதவீதம் இரும்பு சல்பேட், 1 சதவீதம் யூரியா கரைசல் ஆகியவற்றை ஒரு லிட்டருக்கு 1 மில்லி வீதம் பீப்பால் சேர்த்து தெளிக்க வேண்டும்.

இடைக்கணு புழுவை கட்டுப்படுத்த டிரைக்கோரிராமா முட்டை ஒட்டுண்ணி அட்டைகளை ஏக்கருக்கு 1 சி.சி., வீதம் ஆறு முட்டை இட வேண்டும். இந்த தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு அவர் பேசினார்.வேளாண் காப்பீட்டு நிறுவன மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி, வேளாண் உதவி இயக்குனர் நமச்சிவாயம், தோட்டக்கலை உதவி இயக்குனர் சுப்ரமணியன், வேளாண் அலுவலர் ஜெயக்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**துல்லிய பண்ணையம் அமைக்க; விவசாயிகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,01:18 IST

காரைக்குடி,: வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன் அறிக்கை:

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், சாக்கோட்டை வட்டாரத்தில் துல்லிய பண்ணையம் அமைக்க, மானியம் வழங்கப்படுகிறது. கரும்பு, நிலக்கடலை, மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் விண்ணப் பிக்கலாம். பண்ணையம் அமைக்க குறைந்தது ஒரு எக்டேர் நிலம், தண்ணீர் வசதி வேண்டும். சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு 11, 200 ரூபாய்; உரத்திற்கு 7500 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள், உதவி வேளாண் அலுவலர்களை சந்தித்து பதிவு செய்து கொள்ளலாம்.இந்த ஆண்டிற்கான பூச்சி கண்காணிப்பு திடல், சாக்கோட்டை, பிரம்புவயல் கிராமங்களில் அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. வாரந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட வயல்களில் பூச்சி கணிப்பு செய்து ஆலோசனை வழங்கப்படும் என்றார்.

**விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,01:15 IST

காரைக்குடி: வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன் கூறியதாவது: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத் தின் கீழ், செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கம் பெறும் விவசாயிகளுக்கு 800 ரூபாய்க்கான இடு பொருட்களும், 2,200 மதிப்பிலான கோனாவீடர், மார்க்கர் கருவிகளும் மானிய விலையில் வழங் கப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள் உதவி வேளாண் அலுவலரை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**ஆடிப்பட்ட காய்கறி சாகுபடிவிவசாயிக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:34 IST

கரூர்: தாந்தோணி வட்டார விவசாயிகளுக்கு ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாம் கரூரில் நடந்தது.தாந்தோணி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர் நடராஜன் பேசுகையில், ""ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காய்கறிப்பயிர் விதை தேர்வு குறித்து விவசாயிகளுக்கு வழிகாட்டப்படுகிறது.நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் 65 சதவீதம் மானிய விலையில் சொட்டு நீர் பாசன கருவிகள் அமைத்துக் கொடுக்கபடும். துல்லிய பண்ணையத் திட்டத்தின் கீழ் நீரில் கரையும் உரங்கள் முற்றிலும் இலவசமாக வினியோகம் செய்யப்படும் விபரமும் விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. ஆடிப்பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் திட்டங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றார்.ஏற்பாடுகளை தாந்தோணி வட்டார வேளாண்மை உதவி அலுவலர்கள் பரமேஸ்வரன், சுமதி, செந்தில்குமார் செய்திருந்தனர்.

**தென்னை மர காப்பீடு திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2010,03:50 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தென்னை மர காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.
வேளாண் இணை இயக்குனர் ராஜன் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா சாகுபடிக்கு அடுத்தப்படியாக தென்னை விவசாயம் நடக்கிறது. மாவட்டத்தில் 20,000 விவசாயிகள் தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். 14,460 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.தென்னை சாகுபடியில் விவசாயிகள் ஆண்டு தோறும் பல்வேறு காரணங்களால் மகசூல் இழப்பை ஏற்க நேரிடுகிறது. குறிப்பாக வறட்சியினால் மரங்கள் காய்ந்து விடுதல், மற்றும் பூச்சி நோய் தாக்குதலினால் பாதிப்பு ஏற்படுத்தியும், இயற்கை சீற்றங்களாலும் பாதிப்பு ஏற்படுகிறது.இது போன்ற இயற்கை சீற்றங்களினால் விவசாயிகள் பாதிப்படைவதை ஈடு செய்யும் வகையில் தமிழக அரசும் மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியமும் இணைந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை மர காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்காப்பீடு திட்டம் தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காப்பீடு திட்டத்துக்கு 2010-11ம் ஆண்டுக்கு 1,800 ஹெக்டேர் பரப்பு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தனிப்பயிராகவோ, ஊடுபயிராகவோ, வரப்பில் வரிசையாகவோ, வீட்டு

தோட்டத்தில் நடவு செய்திருந்தால் இத்திட்டத்தில் காப்பீடு செய்யலாம்.ஆண்டுக்கு 30 காய்களுக்கு மேல் மகசூல் தரக்கூடிய மரங்கள் இத்திட்டத்தில் இடம் பெறும். குட்டை, நெட்டை மற்றும் ஒட்டுரகம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.காப்பீடு வசதியை பெற குறைந்த பட்சம் 10 பலன்தரக்கூடிய மரங்காளவது சாகுபடி செய்திருக்க வேண்டும்.
நான்கு வயது முதல் 15 வயதுடைய மரம் ஒன்றுக்கு காப்பீடு தொகை 600 ரூபாயாகும்.மரம் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய முழு பிரிமிய தொகை நான்கு ரூபாய் 69 பைசாவில் மானியம் போக விவசாயி செலுத்த வேண்டிய தொகை ஒரு ரூபாய் 17 பைசாவாகும். இதோ போன்று 16 வயது முதல் 60 வயதுடைய மரம் ஒன்றுக்கு காப்பீடு தொகை 1,150 ரூபாயாகும். மரம் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய முழு பிரிமிய தொகை 6 ரூபாய் 35 பைசாவில் மானியம் போக ஒரு ரூபாய் 58 பைசாவை விவசாயிகள் செலுத்த வேண்டும்.

பிரிமிய தொகையில் 50 சதவீதம் தென்னை வளர்ச்சி வாரியமும், 25 சதவீதம் மாநில அரசும் ஏற்று கொள்கிறது. மீதமுள்ள 25 சதவீத பிரிமியம் மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதுமானதாகும்.காப்பீடு திட்டத்தில் சேர விவசாயிகள் சுய உறுதி முன்மொழிவு படிவத்தை பூர்த்தி செய்து பிரிமியத் தொகையினை "அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிட்.,' என்ற பெயரில் சென்னை வங்கி கணக்கு 006010200018027 என்ற எண்ணில் எடுத்து தென்னை சாகுபடி ஆதாரத்தை இணைத்து அந்தந்த பகுதி வேளாண்மை துறை அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

பாலிசி துவங்கிய ஒரு மாதத்தில்ஏற்படும் இழப்பிற்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படமாட்டாது. விவசாயிகள் தங்கள் பிரிமியத்தை ஆண்டு தோறும் புதுப்பித்துக்கொள்ளலாம். 30 மரங்களுக்கு காப்பீடு செய்துள்ளவர்களளுக்கு இரு மரங்கள், 100 மரங்களுக்கு காப்பீடு செய்துள்ளவர்களுக்கு மூன்று மரங்கள், 100 மரங்களுக்கு மேல் காப்பீடு செய்துள்ளவர்களுக்கு நான்கு மரங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் நஷ்ட ஈடு பெற தகுதியுடையவர்.

*கோதுமை இறக்குமதி 37% குறைய வாய்ப்பு*



*ரஷ்யா வெளிநாடுகளுக்கு கோதுமை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்துள்ளது. இதனால், சர்வதேச அளவில் கோதுமை விலை உயர்ந்து வருகிறது. எனவே, நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் கோதுமை இறக்குமதி, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 37 சதவீதம் சரிவடைந்து ஒரு லட்சம் டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*கையிருப்பு*

*அதேசமயம், இந்தியாவில் கோதுமை உற்பத்தியும், கையிருப்பும் நன்றாக உள்ளது. எனவே, அண்டை நாடுகளுக்கு கோதுமை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*உலகின் கோதுமை உற்பத்தியில் ரஷ்யா 8 சதவீத பங்களிப்பை கொண்டு மூன்றாவது மிகப் பெரிய நாடாக உள்ளது. சர்வதேச கோதுமை ஏற்றுமதியில் ரஷ்யாவின் பங்களிப்பு 11 சதவீதமாக உள்ளது.*

*இந்நிலையில், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ரஷ்யாவில் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, அந்நாட்டில் கோதுமை உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. எனவே, உள்நாட்டில் போதுமான அளவில் கோதுமை கிடைக்க வேண்டும் என்பதற்காக, கோதுமை ஏற்றுமதி செய்வதற்கு ரஷ்யா தற்காலிகமாக தடை விதித்துள்ளது. இந்த தடை இம்மாதம் 15–ந் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 31–ந் தேதி வரை அமலில் இருக்கும்.*

*இந்த தடை காரணமாக, உலக அளவில் கோதுமை இறக்குமதியில் முதலிடத்தில் உள்ள*

எகிப்து நாட்டுக்கு, ரஷ்யா நாட்டு நிறுவனங்கள் மேற்கொள்ள உள்ள 6 லட்சம் டன் கோதுமை ரத்தாகிவிடும் என்று அந்நாட்டு நிறுவனம் ஒன்றின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வங்காளதேசம்

ரஷ்யாவின் ஏற்றுமதி தடையால், அளிப்பு குறைந்து, சர்வதேச அளவில் கோதுமை விலை 12 சதவீதம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளுக்கு, குறிப்பாக வங்காளதேசத்திற்கு 30 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி வரலாறு காணாத வகையில் 8.07 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டு ஆகஸ்டு 1–ந் தேதி அன்று கோதுமை கையிருப்பு 3.20 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இது, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1.71 கோடி டன்னைக் காட்டிலும் 87 சதவீதம் அதிகமாகும்.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 11.40%–ஆக உயர்வு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஜூலை 31–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 11.40 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேசமயம், சென்ற ஜூலை 24–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 9.53 சதவீதமாக இருந்தது.

சென்ற 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 20 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்திருந்தது. ஜூலை 3–வது வாரத்தில் இது ஒற்றை இலக்கத்திற்கு சரிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், சில பருப்பு வகைகள், அரிசி, கோதுமை விலை அதிகரித்திருந்தது. குறிப்பாக, சென்ற ஆண்டு இதே வாரத்துடன் ஒப்பிடும்போது, குறிப்பிட்ட சில பருப்பு வகைகளின் விலை 20.74 சதவீதம் உயர்ந்திருந்தது. இதேபோன்று, அரிசி (6.89%) மற்றும் கோதுமை (7.93%) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.

மேலும், பால் பொருள்கள் (19.03%), பழங்கள் (7.42%) போன்றவற்றின் விலையும் அதிகரித்திருந்தது. அதேசமயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட குறிப்பிட்ட சில காய்கறிகள் விலை குறைந்திருந்தது.

**ஊட்டியில், கொய்மலருக்கு விலை உயர்வு கேட்டு சிறு விவசாயிகள் நூதன போராட்டம்**




ஊட்டியில் கொய் மலர் சாகுபடி சிறு விவசாயிகள் ரூ.1–க்கு 3 பூக்கள் விற்று நூதன முறையில் போராட்டம் நடத்திய போது எடுத்த படம்.

ஊட்டி, ஆக.13–

ஊட்டியில், கொய் மலருக்கு விலை உயர்வு கேட்டு சிறு விவசாயி கள் நேற்று நூதன போராட் டத்தில் ஈடுபட்டனர்.

கொய்மலர் சாகுபடி

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2000–ம் ஆண்டு பச்சை தேயிலை கடும் விலை வீழ்ச் சியை சந்தித்தது. இத னால் விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட னர். அதனை தொடர்ந்து தேயிலைக்கு பதிலாக மாற்று பயிர் திட்டம் அரசு மூலம் கொண்டு வரப்பட்டது. இதன்படி அரசின் மானியத் துடன் கொய் மலர் சாகுபடி திட்டம் செயல் படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் படி நீலகிரி மாவட்டத்தில் 500க் கும் மேற்பட்ட சிறு விவசாயி கள் பசுமை குடில்களை அமைத்து, கொய்மலர் சாகு படியில் ஈடுபட்டனர். இதற் காக விவசாயிகளுக்கு வங்கி கடன் மற்றும் மானியம் அரசு மூலம் வழங்கப்பட்டது.

நஷ்டம்

கொய்மலர்களை விவசாயி கள் ஊட்டி, பெங்களூர் பகுதியில் விற்பனை செய்து வந்தனர். ஆரம்ப காலத்தில் மலர் சாகுபடியாளர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைத்து வந்த்து. நாளடை வில் மலர்களுக்கு விலை குறைந்து வந்தது. மேலும் மலர் உற்பத்தியும் குறைந்தது. இதனால் கொய்மலர் சாகு படியில் ஈடுபட்ட விவசாயி களுக்கு நஷ்டம் ஏற்பட்டது.

இதன் காரணமாக விவசாயி கள் ஊட்டியில் மலர் ஏற்றுமதி மையம் சரியாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும், மலருக்கு கட்டுப்படியான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு மாவட்ட கலெக்டர், தோட்டக்கலை துறை அதி காரிகளுக்கு மனுக்கள் கொடுத் தனர். ஆனால் எந்தவித நட வடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்று கூறப்படு கிறது.

நூதன போராட்டம்

இந்த நிலையில் நேற்று நீலகிரி மாவட்ட கொய்மலர் சாகுபடி சிறு விவசாயிகள் ஊட்டியில் உள்ள தோட் டக்கலை துறை வளாகம் முன்பு நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். ரோட்டில் மலர்களை மிகக்குறைந்த விலைக்கு விற்று போராட்டம் நடத்தினார்கள். 1 ரூபாய்க்கு 3 கொய்மலர்களை அவர்கள் விற்பனை செய்தனர். இந்த போராட்டத்துக்கு நீலகிரி மாவட்ட மலர் உற்பத்தி சிறு விவசாயிகள் சங்க தலை வர் விஸ்வநாதன், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். போராட்டத்தில் ஏராளமான ஆண், பெண் சிறு விவசாயிகள் கலந்து கொண்டனர். குறைந்த விலைக்கு விற்பனை செய்யப் பட்ட மலர்களை ஏராளமான பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் வாங்கி சென்ற னர்.

இது குறித்து மலர் உற்பத்தி சிறு விவசாயிகள் சங்க செய லாளர் கிருஷ்ணமூர்த்தி நிரு பர்களிடம் கூறியதாவது:–

ரூ.5 லட்சம் கடன்

நீலகிரி மாவட்டத்தில் பச்சை தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்ட போது, நீலகிரி தோட்டக்கலை துறை மூலம் 2003–2004–ம் ஆண்டில் மாற் றுப்பயிராக மலர் சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டது. மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியத் துடன் வங்கிகள் மூலம் ரூ.5 லட்சம் கடன் வழங்கப்பட் டது. வங்கிகளில் எங்கள் நிலத்தையும், வீட்டையும் அடமானம் வைத்து கடன் பெற்றோம்.

மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தோட்டக் கலை துறை மூலம் நவீன தொழில்நுட்ப பயிற்சி அளிக் கப்படவில்லை. உதவிகளும் செய்யப்படவில்லை. தோட் டக்கலை துறை பரிந்துரை மூலம் சில கம்பெனிகளில் இருந்து மலர் சாகுபடி நாற் றுக்கள் வாங்கப்பட்டது. இந்த நாற்றுக்கள் ஒரு முறை மட்டும் பூக்களை தந் தது.

அதன் பிறகு பூக்கள் தர வில்லை. 6 மாத காலத்தில் செடிகள் பட்டுபோய் விட்டன. இந்த நிலையில் ஊட்டியில் கொய்மலர் ஏல மையம் தொடங்கப்பட்டது. முதலில் ஏலம் எடுப்பவர்கள் பெங்க ளூரில் இருந்து வந்து, மலர் களை வாங்கி சென்றனர். நாளடைவில் உள்ளூர் மலர் ஏஜெண்டுகளுடன் கூட்டணி அமைத்து, தரமான மலர் கொண்டு வந்தாலும், கட்டுப் படியான விலையை தர வில்லை.

தவறான தகவல்

மலர் சாகுபடி யில் கார் னேசன் மலர் உற்பத்தி செய்ய ரூ.4–ம், ஜெர்பரா மலர் உற் பத்தி செய்ய ரூ.5–ம் செலவா கிறது. ஆனால் மலர் ஏஜெண் டுகள் மூலம் இந்த மலர்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ரூ.1.50 காசு வழங்கப்படுகிறது. மலர் களை தினம், தினம் ஏலம் விட வேண்டும். கிராமப்பகுதிகளில் இருந்து தினமும் சிறு விவ சாயிகள் 50 முதல் 100 மலர் களை ஊட்டிக்கு கொண்டு வர வேண்டியது உள்ளது. அப்படி கொண்டு வந்தாலும் சரியான விலை கிடைப்பது இல்லை. இதனால் விவசாயி கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். ஆனால் தோட் டக்கலை அதிகாரி ஒருவர், அரசு உயர் அதிகாரிகளிடம், மலர்களுக்கு குறைந்தது ரூ.5 முதல் ரூ.7 வரை விலை கிடைப்பதாக தவறான தகவல் கொடுத்து வருகிறார். எனவே தமிழக அரசு மற்ற விவசாயி களுக்கு கடன் தள்ளுபடி செய்தது போல் மலர் சாகுபடி சிறு விவசாயிகள் பெற்ற கடனை தள்ளபடி செய்ய வேண்டும். கொய் மலருக்கு நல்ல விலை கிடைக்க நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த போராட்டம் தொடர் பாக நீலகிரி மலை மாவட்ட சிறு விவசாயிகள் சங்க தலை வர் ஐ.போஜன் கூறியதாவது:–

நானும், நிர்வாகிகளும் மலர் சாகுபடி விவசாயிகள் போராட்டம் பற்றி அறிந்து ஊட்டிக்கு வந்தோம். சென் னையில் எங்கள் சங்கத்தின் சார்பில் எனது தலைமையில் வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தை சந்தித்து பேசினோம். அவர், மலர் சாகுபடி விவசாயி களின் கடனை தள்ளுபடி செய்யவும், நீலகிரி தேயிலை விவசாயி களுக்கு தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு மானியமும் வழங்க நடவடிக்கை எடுப்பதாக கூறி உள்ளார்.எனவே போராட்டம் நடத்திய மலர் சாகுபடி சிறு விவசாயிகளிடம் விவரத்தை தெரிவித்து உள்ளோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**கோவையில் 18–ந் தேதி விவசாய நிலங்களை பாதிக்கும் பைபாஸ் ரோடு திட்டங்களை கைவிடக்கோரி ஆர்ப்பாட்டம் தமிழக விவசாயிகள் சங்கத்தலைவர் சிவசாமி பேட்டி**

*கோவை, ஆக.13–*

*கோவை செஞ்சிலுவை சங்கம் முன் வருகிற 18–ந் தேதி விவசாஅய நிலங்களை பாதிக்கும் பைபாஸ் திட்டங்களை கைவிடக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழக விவசாயிகள் சங்கத்தலைவர் எம்.ஆர்.சிவசாமி கூறினார்.*

*பைபாஸ் திட்டங்கள்*

*கோவை காந்திபுரம் தமிழ்நாடு ஓட்டலில் தமிழக விவசாயிகள் சங்கத்தலைவர் எம்.ஆர்.சிவசாமி நிருபர்களிடம் கூறியதாவது:–*

*நீலாம்பூர், சாவடி, பைபாஸ் சாலை திட்டங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்படும் நிலங்கள் பற்றிய விவரங்கள், சர்வே எண், நில உரிமைதாரர்கள், நில விஸ்தீர்ணம் பற்றிய தகவல் விரிவாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிக்கையால் 3 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும், 5 ஆயிரம் குடும்பங்களும் பாதிக்கப்படும். விவசாய தானிய உற்பத்தி வெகுவாக குறையும்.*

*எனவே விவசாயிகளின் நலன் கருதி பைபாஸ் திட்டங்களை கைவிடக்கோரி பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. அப்படி இருந்தும் விவசாயிகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் நில ஆர்ஜித அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.*

*ஆர்ப்பாட்டம்*

*எனவே தற்போதைய நில ஆர்ஜித நடவடிக்கையை கைவிடக்கோரி, 4 பைபாஸ் திட்டங்களையும் ரத்து செய்யக்கோரியும் பெருமாநல்லூர், அவினாசி, நீலாம்பூர், சாவடி பைபாஸ் திட்டங்களால் பாதிக்கப்படும் விவசாயிகள் மற்றும் கட்டிட தாரர்களை ஒன்று திரட்டி கோவை செஞ்சிலுவை சங்கம் முன் வருகிற 18–ந் தேதி காலை 10.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும். முன்னதாக ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்துவது குறித்து விவாதிக்க 16–ந் தேதி மாலை 3 மணிக்கு பெரியநாயக்கன்பாளையம் சாந்திமேடு லட்சுமி திருமண மண்டபத்தில் நீலாம்பூர் பைபாஸ் விவசாயிகள், கட்டிடதாரர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் நடைபெறுகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் தனித்தனியாக போராட்டம் நடத்தாமல், ஒன்றுபட்டு போராட்டம் நடத்த வேண்டும் என்று கருதி நீலாம்பூர், சாவடி, பெருமாநல்லூர், அவினாசி பைபாஸ் எதிர்ப்பு போராட்டம் நடத்த உள்ளோம். கடந்த ஆண்டு பெருந்துறை, ஓசூர், சிப்காட், நில ஆர்ஜிதம் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒன்று திரண்டு எதிர்ப்பு தெரிவித்ததால் சிப்காட் திட்டங்கள் கைவிடப்பட்டன.*

*இவ்வாறு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தலைவர் எம்.ஆர்.சிவசாமி கூறினார்.*